மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை.
முன்னிலை: திரு.செ.பி.பர்வத்ராஜ் ஆறுமுகம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2024–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28–ம் நாள் திங்கள்கிழமை.

இடைநிலை மனு எண்.7/2024

இன்

அசல் வழக்கு எண்.493/2019

சென்ட்ராயன் .... மனுதாரர்/வாதி

/ எதிர் /

சர்புதீன் (இறந்தார்)
1. செங்கமலை
2. தம்பிதுரை
3. முத்தையாள் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

4. முருகேசன்
5. கருப்பையா .... எதிர்மனுதாரர்கள்/புரபோஸ்டுபார்ட்டிகள்

இம்மனு 30.09.2024–ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. E. V. வள்ளுவன்நம்பி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

உத்தரவு

இந்த மனுவானது மனுதாரர்கள்/வாதிகள் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2)–ன் படி இம்மனுவில் கண்டுள்ள 4, 5 எதிர்மனுதாரர்கள்/ 4, 5 புரபோஸ்டு பார்ட்டியை அசல் வழக்கில் அவசிய தரப்பினராக சேர்க்க அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்

மனுதாரர் மேற்படி அசல் வழக்கின் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை, சுவாதீனம் மற்றும் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தொடர்ந்து நிலுவையிலிருந்து வருகிறது என்றும், மேற்படி நம்பர் வழக்கு

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.10.28 17:35:46 +0530

நிலுவையிலிருந்து வரும் நிலையில் தாவா சொத்துக்களை இந்த வழக்கின் 2-ம் பிரதிவாதி செங்கமலை என்பவர் தனது மகன்களான இம்மனுவில் கண்டுள்ள எதிர்மனுதாரர்கள்/புரபோஸ்டுபார்ட்டிகளுக்கு பொய்யான மற்றும் மோசடியான தான செட்டில்மெண்ட் போன்ற ஆவணங்களை கடந்த 07.01.2019 -ம் தேதியன்று ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி மோசடியான தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் பற்றி கேள்விபட்டு அதனை இணைய வழியில் நகல் எடுத்து பார்த்தபோது தான் தனக்கு மேற்படி விபரம் தெரிய வந்தது என்றும், மேற்படி தான செட்டில்மெண்ட் போன்ற செல்லாத மோசடியான ஆவணங்கள் மூலம் இந்த வழக்கின் எதிர்மனுதாரர்கள்/புரபோஸ்டுபார்ட்டிகளுக்கு எந்தவித பயனும் ஏற்படபோவதில்லை என்றும், மேற்படி நம்பர் வழக்கில் மேற்படி எதிர்மனுதாரர்கள்/புரபோஸ்டு நபர்கள் இவ்வழக்கிற்கு மிகவும் அவசியமான தரப்பினர்கள் என்றும், மேலும் இது சம்மந்தமாக தனது வழக்கறிஞரை சந்தித்து விபரம் கேட்டபோது, மேற்படி நம்பர் வழக்கில் இம்மனுவில் கண்டுள்ள எதிர்மனுதாரர்கள்/புரபோஸ்டு நபர்களை சேர்க்க வேண்டுமென்ற விவரம் தெரியவந்தது என்றும், எனவே மேற்படி நம்பர் வழக்கில் இம்மனுவில் கண்டுள்ள எதிர்மனுதாரர்கள்/புரபோஸ்டு நபர்களை ஒரு அவசிய தரப்பினராக சேர்க்க உத்தரவிடுமாறும், இல்லையேல் எனக்கு ஈடில்லா கஷ்டமும் பெருத்த நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிருரை தாக்கல் செய்யாததால் 30.09.2024 ம் தேதி ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர்.

4. வாதி தரப்பில் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில்,
"மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

<u>6. தீர்வு</u>

மனுதாரரர்/வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கட்டினை பரிசீலித்த வகையில் மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்து பொருத்து ஏற்படுத்தப்பட்ட 02.08.1993 மற்றும் 04.01.1996 ம் தேதியிட்டு 1, 2 பிரதிவாதிகளின் பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரையபத்திரத்தை ரத்து செய்யவும், சட்டப்படி செல்லதக்கதல்ல மற்றும் இல்லா நிலையது என்று விளம்புகை செய்திட

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.10.28 17:35:51 +0530

கோரியும், தாவா சொத்துக்களின் சுவாதீனத்தை அளிக்க கோரியும் மற்றும் அதன் தொடர்ச்சியாக நிரந்தரதடையுறுத்து கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இந்நிலையில் மனுவில் புரபோஸ்டு பார்ட்டியை தரப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டும் என்றும் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இந்நிலையில் தாவா சொத்துக்களை இந்த வழக்கின் 2–ம் பிரதிவாதி செங்கமலை என்பவர் தனது மகன்களான இம்மனுவில் கண்டுள்ள எதிர்மனுதாரர்கள்/புரபோஸ்டுபார்ட்டிகளுக்கு பொய்யான மற்றும் மோசடியான தான செட்டில்மெண்ட் போன்ற ஆவணங்களை கடந்த 07.01.2019 –ம் தேதியன்று ஏற்படுத்தியுள்ளார் என்றும், அவர்களை இவ்அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டியது அவசியம் என்றும், கோரியுள்ளதை ஆராய்கையில், மேற்படி வழக்கில் கோரப்பட்ட பரிகாரத்தின்படி, மேற்படி புரேபோஸ்டு பார்ட்டிகள் வழக்குக்கு தேவையான தரப்பினர் என்றும், எனவே இந்த வழக்கின் எதிர்காலச் சிக்கலைத் தவிர்க்க இவ்வழக்கில் புரபோஸ்டு வாதியானவர் வழக்கை தீர்மானிப்பதற்கு அவர் தரப்பினராக சேர்க்கப்பட வேண்டும் என்பதாகவே இந்நீதிமன்றம் கருதியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் பதிலுரை ஏதும் தாக்கல் செய்யாமல் தோன்றாதரப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளதும் மனுவை அனுமதிப்பது நீதி நலனுக்கு உகந்தது என்று கருதி செலவுத்தொகையின்றி இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லச்சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28–ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.10.28 17:36:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

<u>வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் விவரம்</u>

1. 2ம் பிரதிவாதி தனது இளைய மகன் முருகேசனுக்கு 07.01.2019ம் தேதியிட்டு எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் கணினி மூலம் பெறப்பட்ட இணையதள நகல்

2. 2ம் பிரதிவாதி தனது மூத்த மகன் கருப்பையாக்கு 07.01.2019ம் தேதியிட்டு எழுதிகொடுத்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் கணினி மூலம் பெறப்பட்ட இணையதள நகல்

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை.

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.10.28 17:36:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.